உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.665/2023

| | |
|---|---|
| பெயர் | :அழகுமணி(அ.சா.2) |
| தகப்பனார் பெயர் | :நாகு |
| கணவர் பெயர் | : |
| வயது | :36 |
| கிராமம் | :அரும்பனூர் |
| வட்டம் | :ஒத்தக்கடை |
| தொழில் | :ஓட்டல் ஊழியர் |

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

20.12.2024

முதல் விசாரணை:

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 சேதுராமன் என்னுடைய மாமா ஆவார். கடந்த 26.06.2019 அன்று ஆஜர் 3வது எதிரி கணேசன் மதுபோதையில் எங்கள் அனைவரையும், மனவருத்தம் ஏற்படும் படி நடந்து கொண்டார். அரும்பனூர் கண்மாய்கரையில்இருந்து வரும் போது ஆஜர் 3 வது எதிரி கணேசன் அசிங்கமான வார்த்தைகளை பயன்படுத்தி வீட்டை அடித்து நொறுக்கிவிடுவதாக கூறிக்கொண்டே அரும்பனூரில் உள்ள மந்தைவழியாக ஊருக்குள் வந்தார். அப்போது மணி மாலை சுமார் 5.30 – 6.30 இருக்கும். சோனையுடைய மனைவி பொன்முடியை ஆஜர் 3வது எதிரி கணேசன் கெட்ட வார்த்தையால் அசிங்கமாக பேசினார். பொன்முடிக்கும், ஆஜர் 3வது எதிரி கணேசனுக்கும் இடையே சண்டை முற்றிவிட்டது.ஆஜர் எதிரிகள் கணேசன், பிரபு, பாலமுருகன் ஆகியோர் சேதுராமன் என்பவரை கடப்பாரை, கம்பி, மற்றும் கற்களால் தாக்கினார்கள். அப்போது கல்லால்

தாக்கும் போது எனக்கும் நெற்றியில் காயம் ஏற்பட்டது. மூக்கையா என்ற அருண் என் மீது கல்லால் எறிய எனக்கும் நெற்றியில் காயம் ஏற்பட்டது. தற்போது இந்த வழக்கில் இருந்து மூக்கையா என்ற அருண் மீது உள்ள குற்றச்சாட்டு நீக்கப்பட்டுள்ளது இது தொடர்பாக நீதித்துறை நடுவர் மேலூர் முன்பாக மனு கொடுத்தேன். நீதிமன்றமானது வழக்கு விசாரணையில் பார்த்துக்கொள்ளும்படி கூறிவிட்டார்கள். சேதுராமனுக்கு காலில் அடிபட்டு இருந்ததால் தல்லாகுளத்தில் உள்ள ஜெயம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டார்கள். நான் மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சென்றேன். அன்றைக்கே சென்றுவிட்டேன். காவலர்கள் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் கொடுத்தேன். நான் நடந்தவற்றை கூறினேன்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

ஆஜர் 3வது எதிரி கொடுத்துள்ள எதிர்புகாரில் நானும் எதிரியாக பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளேன் என்றால் சரிதான். காவல்துறை விசாரணையில் 3வது எதிரி கணேசன், சோனை மனைவி பொன்முடியிடம் மதுபோதையில் அசிங்கமாக பேசி தகராறு செய்தார் என்ற விபரத்தை கூறினேனா என்றால் இல்லை. அதேபோல் காவல்துறை விசாரணையில் 3வது எதிரி கணேசன் மதுபோதையில் கண்மாய்கரையில் இருந்து மந்தையை நோக்கி அசிங்மான வார்த்தைகளால் எங்களை திட்டிகொண்டே வந்தார் என்ற விபரத்தை கூறவில்லை என்றால் சரிதான். காவல்துறை விசாரணையில் மூக்கையா என்ற அருண் என்னை கல்லைக்கொண்டு எறிந்து நெற்றியில் காயம் ஏற்பட்டதாக கூறிய விபரத்தை நான் சொன்னேனா என்றால் அப்போது சொல்லவில்லை. 26.06.2017அன்று மாலை 5.00 மணியளவில் கணேசன் தரப்பினர் கண்ணாமணி வீட்டில் வந்து அசிங்கமாக பேசினார் என்ற விபரத்தை

காவல்துறை விசாரணையில் நான் சொன்னேனா என்றால் அப்போது சொல்லவில்லை. 26.06.2017 அன்று இரவு நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது தான் காவலர்கள் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றார்கள். காவலர்கள் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பெறும் போது இரவு சுமார் 8 மணி இருக்கும். அதன்பிறகு காவலர்கள் இந்த வழக்கு தொடர்பாக விசாரிக்கவில்லையா என்றால் விசாரிக்கவில்லை. இந்த வழக்கில் எதிரிகளான பிரபு, பாலமுருகன், மற்றும் கணேசன் ஆகியோர் கம்பி, கடப்பாரை மற்றும் கற்காளால் சேதுராமனை தாக்கியதாக சொல்வது பொய் என்றும் அவ்வாறு ஒரு சம்பவமே நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அன்றைய தினம் நானும், எனது உறவினர்களும் சேர்ந்து கணேசன் வீட்டிற்கு முன்பாக சென்று கணேசனையும், அவரது உறவினர்களையும் அவதூறாக பேசி தாக்கியதால்தான் என் மீதும், என் உறவினர்கள் மீதும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி புகாரில் இருந்து தப்பித்துகொள்வதற்காக தான் இந்த வழக்கின் புகாரானது கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்பதால் தான் காவல்துறை விசாரைணையிலும், முதல் விசாரணையிலும் முன்னுக்கு பின் முரணாக மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2024.12.20 20:42:44 +0530

Assistant Sessions Judge
Melur